செ.வெ.எண்: 07 / ஆகஸ்ட் நாள் : 04.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## லாரி உரிமையாளர்கள் தங்கள் வாகனங்கள் குறித்த விபரங்களை இணையதளத்தில் பதிவு செய்திட வேண்டும்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் குவாரிகளில் மணல் ஏற்றிச் செல்லும் லாரி உரிமையாளர்கள் தங்கள் வாகனங்கள் குறித்த விபரங்களை www.tnsand.in இணையதளத்தில் கட்டாயம் பதிவு செய்திட வேண்டும். பதிவு செய்த விபரங்களை சரிபார்ப்பதற்கான சிறப்பு முகாம் வருகின்ற 07.08.2017 முதல் 11.08.2017 வரை ஐந்து நாட்கள் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

தமிழகத்தில் நிலவி வரும் மணல் தட்டுப்பாட்டினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும், பொதுமக்களுக்கு மணலை குறைந்த விலையில் கிடைக்கும் வகையில் அனைத்து மணல் குவாரிகளையும் பொதுப்பணித்துறையின் மூலம் நேரடியாக அரசே மணல் விற்பனை செய்து வருகிறது. இந்நிலையில், குவாரிகளில் வாகனங்கள் நீண்டநேரம் வரிசையில் காத்திருப்பதை தவிர்க்கும் பொருட்டு, தமிழக அரசு www.tnsand.in என்ற இணையதள சேவையினை தொடங்கி உள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் லாரி உரிமையாளர்கள் தங்கள் வாகனத்தைப் பதிவு செய்து, குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் குவாரியில் இருந்து மணல் எடுத்துக்கொள்ளலாம். அதன்படி, மணல் ஏற்றிச்செல்லும் அனைத்து லாரி உரிமையாளர்களும் தங்களது லாரியின் விபரங்களை இணையதளத்தில் பதிவு செய்யவேண்டும். அவ்வாறு பதிவு செய்த விபரங்களை சரிபார்ப்பதற்கான சிறப்பு முகாம் இராமநாதபுரம் சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி எதிரில் அமைந்துள்ள உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு, உத்திரகோசமங்கை வடிநில உபகோட்ட அலுவலகத்தில் வருகின்ற 07.08.2017 முதல் 11.08.2017 வரை ஐந்து நாட்கள் நடைபெறவுள்ளது. இம்முகாமில் அனைத்து லாரி உரிமையாளர்களும் இணையதளத்தில் பதிவு செய்த நகல் மற்றும் வாகனம் தொடர்புடைய அனைத்து ஆவணங்களுடன் முகாமில் கலந்து கொண்டு பதிவினை உறுதி செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**